**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8108555

1. District மாவட்டம் Tiruvannamalai | PS காவல்நிலையம் Tiruvannamalai V&AC | Year ஆண்டு 2021 | FIR No. மு.த.அ. எண் 07/2021 | Date நாள் 01.10.2021

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 — Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: amended by Act 16 of 2018. — Sections பிரிவுகள்: 102 CrPC.
(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : நாள் முதல் 30.09.2021 — Date to : நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : நேரம் முதல் 12.30 hrs — Time to : நேரம் வரை 22.00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 01.10.2021 — Time : நேரம் 15.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written(Typed)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — Office of the Assistant Director of DTCP, Tiruvannamalai and a private firm SD Association, Tiruvannamalai.
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K.DANASEKARAN
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் Indian
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் PA to District Supply Officer,
(g) Address : முகவரி DSO Office, Collectorate Campus, Tiruvannamalai.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**1.Tr.K.Mohan, Assistant Director, District Town and Country Planning, Tiruvannamalai.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் ------

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ------

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ------

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்தனுப்பப்படுகிறது.

இன்று 01.10.2021-ஆம் தேதி பகல் 14.30 மணிக்கு திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் கோ.மதியழகன் ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது, திரு.க.தனசேகரன், மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர், வட்ட வழங்கல் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருவண்ணாமலை அவர்கள் ஆஜராகி கொடுத்த புகார் மனு இன்று 01.10.2021 ஆம் தேதி பெறப்பட்டடது. மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு, அனுப்புநர் க.தனசேகரன், மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளர், மாவட்ட வழங்கல் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், திருவண்ணாமலை. பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை. அய்யா, கடந்த 30.09.2021 ஆம் தேதி பகல் 12.00 மணியளவில்

- இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு. அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 1/10/21 (K. DHANASEKARAN)

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 01/10/2021
Signature of the Officer in-Charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பட்ட நாளும் நேரமும்

01.10.2021 at 16.00hrs.

Name பெயர் G. MATHI ALAGAN
Rank நிலை DSP, No எண்
V & A C
Thiruvannamalai

GCP 240 34(Type 2) 90,000 Cps 21 3 16(HCL 12)p 2

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை நகரம், மணலூர்பேட்டை சாலையில் அமைந்துள்ள திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில், அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தி அனுமதியளிப்பதற்காகவும், மனைப்பிரிவு ஒப்புதல், கட்டிடம் அனுமதி போன்றவற்றிற்கு பொதுமக்களிடம் நேரடியாகவும், புரோக்கர்கள் மூலமாகவும், உதவி இயக்குனர் திரு.கா.மோகன் என்பவர் லஞ்சம் பெறுவதாகவும், திடீர் இணை சோதனை செய்ய வேண்டும் எனவும் திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் கேட்டுக் கொண்டதன் பேரில், திருவவண்ணாமலை மாவட்ட வழங்கல் அலுவலரின் நேர்முக உதவியாளராகிய நான், திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து, துணை காவல் கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் திருமதி.மைதிலி மற்றும் காவல் ஆளிநர்கள் சகிதம் மேற்படி, திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் 12.30 மணி முதல் 18.00 மணிவரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி சோதனையின் போது உதவி இயக்குநர் திரு.கா.மோகன் என்பவரது மேஜையின் மீது இருந்த போல்டர் பைலில் ஒரு லட்ச ரூபாய் பணம் மற்றும் கோப்பு எண்.1325/2021/தி.மலை என்ற ஆவண நகலும் இருந்தது. இது குறித்து மேஜையின் அருகில் நின்று கொண்டிருந்த திரு.ம.பாலாஜி என்பவர் அவரது பார்ட்னர் நந்தகோபால் என்பவரது ஆவணம் எனவும், வெம்பாக்கம் வட்டம் சித்தாத்தூரில் உள்ள 5 ஏக்கர் மனைபிரிவிற்கு அனுமதி வாங்க மனு செய்து அதன் பேரில் உதவி இயக்குனர் திரு.கா.மோகன் அவர்கள் மேற்படி இடத்தை ஆய்வு செய்து விட்டு கடந்த 27.09.2021 ம் தேதி அவருடைய அலுவலகத்தில் வைத்து ஏக்கருக்கு ரூ.1லட்சம் தனக்கு கொடுக்க வேண்டும் என்று கேட்டதன் பேரில், தங்களது பைல் மனைப்பிரிவு அனுமதிக்காக நீண்ட நாட்களாக நிலுவையிலுருப்பதாலும் வேறு வழியில்லாததால் திரு.கா.மோகன் அவர்களுக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக முன்பணமாக ரூ.1 லட்சம் இன்று கொண்டு வந்து மேஜைமீது வைத்து விட்டு அவருடன் பேசிக்கொண்டிருந்ததாகவும், இது சம்மந்தமாக புகார் கொடுக்க வேண்டும் என்று நினைத்திருந்ததாகவும் கூறினார். எனவே, மேற்படி பணம் ரூ.1லட்சம் திரு.கா.மோகன் அவர்களுக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக கொண்டு வந்த பணமாக கருதி அந்த போல்டர் பைலுடன் கைப்பற்றப்பட்டது. மேலும் அங்கு நின்று கொண்டிருந்த திரு.அருணாச்சலம் மற்றும் திரு.சிவபாலன் ஆகியோரிடம் விசாரித்த போது அவ்வலுவலகத்திற்கு எதிரே அமைந்துள்ள SD அசோசியேட்ஸ் என்ற தனியார் அலுவலகத்தில் வரைபடம் வரையும் வேலை செய்து வருவதாகவும், தங்களுடைய வாடிக்கையாளர் திரு.குமார் என்பவர் மனைப்பிரிவு அனுமதி வேண்டி

திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ள மனுகோப்பு 701/2020ல் உள்ள வரைபடத்திலுள்ள குறை பாடுகளை திருத்தி கொடுப்பதற்காக வந்திருப்பதாகவும், இது போன்று திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தின் பைல்கள் திருத்தம் செய்வதற்காக தங்கள் SD அசோசியேட்ஸ் அலுவலகத்திலும் உள்ளதாக தெரிவித்ததின் பேரில் மேற்படி மனுகோப்பு 701/2020 நகல் சான்றொப்பமிடப்பட்டு கைப்பற்றப்பட்டது. மேற்படி நிகழ்வுகளுக்காக ஒரு செயல்முறை நடவடிக்கை தயாரிக்கப்பட்டது. மேற்படி சாட்சிகள் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும், ரகசிய தகவல்கள் அடிப்படையிலும் திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தின் பைல்கள் தனியார் SD அசோசியேட்ஸ் அலுவலகத்திலும் கையாளப்படுவதாக தெரிந்து தனியார் SD அசோசியேட்ஸ் அலுவலகத்திலும திடீர் சோதனை மேற்கொள்ள தீர்மானித்து அன்று மாலை 18.30 மணிமுதல் 22.00 மணிவரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அங்கு அதன் உரிமையாளர் திரு.தனேஷ் என்பவரது மேசை டிராயரிலிருந்து, திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக 16 அசல் ஆவண கோப்புகள் கண்டெடுக்கப்பட்டு, கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த அலுவலகத்தில் பீரோவிலிருந்து ரூ.1லட்சம் மற்றும் கணனி மேசையிலிருந்து பணம் ரூபாய் எண்பத்தியிரண்டாயிரத்து ஐந்நூறு ஆக மொத்தம் ரூ.1,82,500/- மட்டும் கண்டெடுக்கப்பட்டது. அந்தப்பணத்திற்கு SD அசோசியேட்ஸ் நிறுவன உரிமையாளர் திரு.தனேஷ் என்பவரால் தகுந்த முகாந்திரம் கூற இயலாததால் அந்தப்பணம் திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில், அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தி அனுமதியளிப்பதற்காகவும், மனைப்பிரிவு ஒப்புதல், கட்டிடம் அனுமதி போன்றவற்றிற்காக உதவி இயக்குனர் திரு.கா.மோகன் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக ஊழியர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருக்கலாம் எனக்கருதி அந்தப்பணம் ரூ.1,82,500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி நிகழ்வுகளுக்காக ஒரு செயல்முறை நடவடிக்கை தயாரிக்கப்பட்டது. எனவே மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில், அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்தி அனுமதியளிப்பதற்காகவும், மனைப்பிரிவு ஒப்புதல், கட்டிடம் அனுமதி போன்றவற்றிற்காக உதவி இயக்குனர் திரு.கா.மோகன் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக ஊழியர்களுக்கு கொடுப்பதற்காக வைத்திருக்கலாம் என கருதி திருவண்ணாமலை மாவட்ட நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர் திரு.கா.மோகன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கைப்பற்றப்பட்ட அரசு ஆவண கோப்புகள், பணம் ரூ.2,82,500/- மற்றும் இது

சம்பந்தமாக தயாரிக்கப்பட்ட 2 செயல்முறை நடவடிக்கைகள் ஆகியவற்றினை தங்களிடம் ஒப்படைத்து, இந்தப்புகார் மனுவை கொடுக்கிறேன், நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு,(sd-XXXXX) K.தனசேகரன், PA to DSO, TVMalai.

Sir, Received the Complaint on 01.10.2021 at 14.30 hrs, informed orally to the Superintendent of Police, DVAC, Chennai and after getting permission, a case in Tiruvannamalai V&AC Cr.No.7/2021 u/s 7 of the PC ACT 1988 as amended by Act 16 of 2018 r/w 102 CrPC was registered on 01.10.2021 at 15.00 hrs.(Sd-XXXXX) 01/10/2021, DSP, V&AC, TVM.

இந்த வழக்கின் அசல் புகார் மனு, முதல் தகவல் அறிக்கை செயல்முறை நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் சாட்சிகளின் வாக்குமூலங்கள் ஆகியவை கனம் தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவண்ணாமலை அவர்களுக்கும், நகல்கள் சம்பந்தப்பட்ட அதிகரிகளுக்கும் அனுப்பப்பட்டது.

01/10/2021
G. MATHIALAGAN,
DSP, V&AC,
Thiruvannamalai